Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 355

வியாழக்கிழமை 16 நவம்பர் 2023

ஐப்பசி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## கொட்டும் பெருமழையால் தத்தளிக்கின்றது வடக்கு!

### 850 குடும்பங்கள் பாதிப்பு

### அச்சுவேலியில் அதிக மழை

### தாழ் நிலங்கள் வெள்ளத்தில்

### விவசாய நடவடிக்கை பாழ்

**யாழ்ப்பாணம், நவம்பர் 16**

**வடக்கு மாகாணத்தில் பெய்துவரும் கடும் மழையால் தாழ்நிலங்கள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நேற்றுமுன்தினம் முதல் நேற்று வரையான 24 மணி நேரத்தில் இலங்கையிலேயே அதிகூடிய மழைவீழ்ச்சி அச்சுவேலியில் பதிவாகியுள்ளது.**

»11

## அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம்!

### நீதி அமைச்சர் தகவல்



கொழும்பு, நவ.16

தேர்தல் நடைபெறாது என வீண் அச்சம்கொள்ளவேண்டாம். அடுத்த வருடம் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். இப்போது சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட், தேர்தலை இலக்காகக் கொண்டது அல்ல என்று நீதி அமைச்சர் விஜயதாஸ

»11

## பாதீட்டுக்கு எதிர்ப்பு நாடகமாடும் நாமல்!

### ஐக்கிய மக்கள் சக்தி விசனம்



கொழும்பு, நவ. 16

பாதீட்டுக்கு எதிராக கருத்து வெளியிடுவதுபோல் நாமல் ராஜபக்ச நாடகமாடிவருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில்

»11

## அரசியல்தீர்வு தேவையில்லை!

### கூறுகின்றார் ஊடக அமைச்சர்



கொழும்பு, நவ.16

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள அரசியல் தீர்வுகள் தேவையில்லை, பொருளாதாரத் தீர்வுகளே அவசியம் - இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

»11

## வீட்டில் நகை மாயம் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், நவ.16

வட்டுக்கோட்டை, முதலிகோயில் பகுதியில் உள்ள வீடொன்றில் நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

»11

## கடும் மழைக்கு மத்தியிலும் கட்டுவனில் கொள்ளை முயற்சி

### முகமூடி கழன்றதால் தப்பியோடிய கொள்ளையர்கள்

யாழ்ப்பாணம், நவ.16

தெல்லிப்பழை, கட்டுவன் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஊரான் கூடையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் மூன்று பிள்ளைகளுடன் தனிமையில் வசித்த பெண்ணைத் தாக்கிக் கொள்ளையிட

»12

### மூதாட்டி கொலை;

## மறியல் நீடிப்பு

யாழ்., நவ.16

அல்வாய், கிழக்கில் மூதாட்டி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும்

»09

## அத்துமீறிய மீனவருக்கு இரு ஆண்டுகள் சிறை!

### 21 பேருக்கு ஒத்திவைத்த சிறை

### ஊர்காவற்றுறை நீதிமன்றம் விதிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 22 பேரில் ஒருவருக்கு இரு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஏனையோர் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 26

»11

### 5 வருட வழக்கின் பின்

## சுகாதாரச் சீர்கேட்டுக்கு ரூ. 25 ஆயிரம் தண்டம்!

யாழ்ப்பாணம், நவ.16

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு 5 ஆண்டு வழக்கின் பின்னர் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாணம் நீதிமன்றம்.

»12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவுக்கு நீதிவேண்டி நீலிக்கண்ணீர் வடிப்பு

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 16

இலங்கையில் போரின்போது மருத்துவமனைகள் மீது கொத்தணிக் குண்டுகளை வீசிய இலங்கை அரசு, காஸா தொடர்பில் முதலைக்கண்ணீர் வடிக்கின்றது.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

காஸாவில் இறந்துபோன குழந்தைகள் பற்றிக் கதைக்கின்றனர், அங்கு நடைபெறும் சம்பவங்கள் தொடர்பில் கண்ணீர் வடிக்கின்றனர். நாம் அதனை நிராகரிக்கவில்லை.

அந்த வலி, வேதனை நேரில் உணர்ந்தவர்கள் நாங்களே. இதே துன்ப, துயரங்கள் எமது மண்ணில் சிங்களப் பேரினவாதிகளின் தாக்குதல்களால் நாம் எதிர்கொண்டவை. மருத்துவமனைகள் மீது கொத்தணி மற்றும் பொஸ்பரஸ் குண்டுகள் வீசப்பட்டன. குழந்தைகள் கஞ்சிக்காக நின்றபோதுகூட குண்டுகள் வீசி பொசுக்கப்பட்டன. அரச படைகளே இவற்றுக்கு பொறுப்புக்கூறவேண்டும்.

எமது நாட்டில் என்ன செய்தோம் என்பதை மறந்துவிட்டு தற்போது காஸா விவகாரத்தில் நீலிக்கண்ணீர் வடிப்பது ஏன்?

தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வை வழங்கவேண்டும் என்ற சிந்தனை சிங்களத் தலைவர்களுக்கு வந்தால் மட்டுமே இந்த நாடு முன்னேறும் - என்றார். (ச-44)

# மீனவருக்கு பாதீட்டில் நிதி கிடைப்பது ஐயமே

## தேசிய மீனவ அமைப்பாளர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, நவ. 16**

**வரவு- செலவுத் திட்டத்தில் அரசாங்கம் முன்வைத்துள்ள மீனவர்களுக்கான நிதியொதுக்கீடானது எவ்வகையில் சரியான முறையில் மீனவர்களை சென்றடையும் என்பது ஐயமே.**

-இவ்வாறு தேசிய மீனவஅமைப்பின் அமைப்பாளர் ஹமன்குமாரஜோசப் பிரான்சிஸ் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மீனவரின் வாழ்வாதாரம் தற்போது மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. நாட்டின் பொருளாதார இடர் நிலையால் வாரத்தில் மூன்று நாள்களே கடற்றொழில் செய்ய நேரிடுகிறது. அதேவேளை அரசாங்கம் புதிய கடற்றொழில் சட்டத்தை உருவாக்கி வருகின்றது. இந்தச் சட்டம் தொடர்பாக போதிய தெளிவுபடுத்தல் இல்லை. இதனால் பல்வேறு இன்னல்களுக்குள்ளாக வேண்டியுள்ளது. அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள பட்ஜெட் ஒதுக்கீட்டில் மீனவர்களுக்கான நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிதியொதுக்கீடு எமக்குக் கிடைக்கப்பெறும் என்பது கூட பெரும் ஐயப்பாடாகவே உள்ளது - என்றார். (ச-113)


### விபத்தில் ஆசிரியர் காயம்

யாழ்ப்பாணம், நவ.16

மானிப்பாய், கட்டுடையில் நேற்று இரவு நடந்த விபத்தில் ஆசிரியர் ஒருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார். இந்த விபத்து இரவு 7 மணியளவில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்துக்குள்ளானவர் அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

# போதைப் பொருளுடன் இருவர் கைது

மன்னார், நவ. 16



மன்னாரில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் என்று சந்தேகிக்கப்படும் இருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பள்ளிமுனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் 19, 25 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-60)

# நாடாளுமன்றில் மோதல்: குழு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 16

நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு சபாநாயகரால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழு தனது அறிக்கையை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்தது.

கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, ரோஹண பண்டார, சுஜித் சஞ்சய் பெரேரா ஆகியோருக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியிருந்தது.

இதுதொடர்பில் இரு தரப்பிலிருந்தும் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விரைவாக விசாரணைகளை நடத்தி அறிக்கையிடுவதற்காக பிரதி சபாநாயகர் தலைமையில் குழுவொன்றை சபாநாயகர் நியமித்திருந்தார்.

அதற்கமைய இந்தக்குழு மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கையே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ச-44)

# ஹாட்லிக் கல்லூரியில் குருதிக்கொடை நாளை

யாழ்ப்பாணம், நவ. 16

ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் முன்னெடுக்கப்பட்டு வரும் குருதிக் கொடை முகாம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஹாட்லி கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரை பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன், பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகிய நால்வரின் 24 ஆவது ஆண்டு நினைவையொட்டியும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல்பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணம் என்ற மாணவனது 19 ஆவது ஆண்டு நினைவையொட்டியும் இந்தக் குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

தன்னார்வக் குருதிக்கொடையாளர்கள் முகாமில் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-100)

# மக்களின் ஜனநாயக உரிமை ரணில் அரசால் புறக்கணிப்பு!

## ஆஸி. தூதுவரிடம் முறையிட்டார் சஜித்

கொழும்பு, நவ. 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் வகையில் தேர்தல்களை தொடர்ச்சியாக ஒத்திவைத்துவருகின்றது என்று ஆஸ்திரேலியத் தூதுவரிடம் முறையிட்டுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் போல் வெஸ்லிஸ்டீபன்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர்களுக்கு இடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்காக தற்போதைய ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பாதீட்டில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஆஸ்திரேலியத் தூதுவருக்கு எடுத்துரைத்தார்.

அத்துடன், தற்போதைய அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தலை தொடர்ச்சியாக ஒத்திவைத்துள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர், ஆஸ்திரேலிய தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் திருமதி லலிதா கபூர், நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்த்தன மற்றும் நிரோஷன் பெரேரா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (ம-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மீன்பிடி அபிவிருத்திக்கு

# ரூ.500 மில்லியன் ஒதுக்கியது வெளிநாட்டவர்களுக்காகவா?

### கேள்வி எழுப்புகிறார் சுப்பிரமணியம்

**யாழ்ப்பாணம், நவ. 16**

**வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு மீன்பிடி அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதி வெளிநாட்டு மீனவர்கள் இங்கு வந்து தொழில் செய்வதை மேம்படுத்துவதற்காகவா என்று கேள்வி எழுப்பியுள்ளார். வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரும், அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான எம்.வி. சுப்பிரமணியம்.**

யாழ்ப்பாணம் மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் வடக்கில் கட்டுப்படுத்தப்படவில்லை. தென்னிலங்கை மீனவர்கள் அனுமதிக்கு முரணாக இங்கு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். உள்ளூர் இழுவைப் படகுகளும் கட்டுப்படுத்தப்படவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் வெளிநாட்டவர்களுக்கு எமது கடலில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கும் செயற்பாடும் நடக்கின்றது.

போரால் பின்தங்கிய வடக்கு மீனவர்களுக்காக தனித்துவமாக இதுவரையில் எதுவும் செய்யாத அரசாங்கம், திடீரென வடக்கு மீனவர்களின் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

வெளிநாட்டவர்கள் எமது கடலில் மீன்பிடிப்பதை வசதிப்படுத்துவதற்காகவோ இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்று கேட்க விரும்புகின்றோம் - என்றார். (ஒ-27)

# தனியார் கல்வி நிலைய ஆசிரியரால் மாணவர் பலவந்த ஓரினச் சேர்க்கை!

### முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, நவ.16

முல்லைத்தீவு,நெட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டியன்குளம் பகுதியில் மாணவர்களை பலவந்த ஓரினச் சேர்க்கையில் நீண்டகாலமாக ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியுரர் கல்வி நிலையம் நடத்திவரும் கணிதபாட ஆசிரியரான இவர், தனியார் வகுப்புக்குவரும் மாணவர்களை பல ஆண்டுகளாக பலவந்த ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மாணவர் ஒருவர் பலவந்த ஓரினச் சேர்க்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில், குறித்த மாணவர் முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரியால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார். பரிசோதனையில் அந்த மாணவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது. தொடர்ச்சியான விசாரணைகளில் கடந்த ஓராண்டு காலப் பகுதியில் சுமார் ஆறு மாணவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அதையடுத்து சந்தேகநபரான ஆசிரியர் நெட்டாங்கண்டல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, கடந்த13ஆம்திகதிநீதிமன்றில்முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பாக சட்ட மருத்துவ பரிசோதனைகள், முதற்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (அ-எ-19)

# அதானி குழுமத்துக்கு மன்னாரில் எதிர்ப்பு

மன்னார், நவ. 16

பேசாலையில் காற்றாலை அமைப்பதற்காக தனியார் காணியில் அடாத்தாகக் கோபுரம் அமைக்க எடுக்கும் முயற்சிக்கு காணி உரிமையாளர்கள் தடை விதிக்கின்றபோதும் அதற்கு எதிராக அதானி குழுமம் செயற்படுவதைக் கண்டித்து பேசாலை மக்கள் அணி திரண்டுள்ளனர்.

மன்னார் தீவுப் பகுதியில் தொடர்ந்து காற்றாலை அமைக்கவேண்டாம் என இப்பகுதி மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றபோதும் மக்களின் குரல்களுக்கு செவிசாய்க்காமல் வட கடற்கரையோரப் பகுதியில் அதானி குழுமத்தைச் சார்ந்தவர்கள் காற்றாலை அமைப்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக மன்னார் பிரதேச செயலகத்தின் ஊடாக தனியார் காணிகளை சுவீகரிக்கும் நோக்குடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டபோது பிரதேச செயலரோ அல்லது கிராமஅலுவலர்களோ அரசாங்க காணிகள் தொடர்பாக செயற்படலாமேயொழிய காணிகளை அடாத்தாகப் பிடிப்பதற்கான நடவடிக்கைகளை தனியார் மேற்கொள்ளக்கூடாது என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பேசாலை பகுதியில் காற்றாலை அமைப்பதற்கான முன்னேற்பாடாக தனியார் காணி ஒன்றில் பரீட்சார்த்த கோபுரம் கட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இதை காணி உரிமையாளர்கள் தங்கள் அனுமதியின்றி அமைக்கப்படுவதால் பொலிஸ் நிலையத்தில் இதை தடைசெய்ய நடவடிக்கை எடுக்கும்படி முறையீடும் செய்தனர்.

ஆனால் இது பலனளிக்காத நிலையைத் தொடர்ந்து இவற்றை நிறுத்துவதற்கு பேசாலை மக்கள் ஒன்று திரண்டு தடை செய்யு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (ஒ-60)



# புதினம் தெரியுமோ?

**சட்டங்களும், தண்டனையளும் எளியவையிட்டத்தான் பாயும், வலியவையெண்டா பம்மிக்கொண்டிருக்கும். ஒரு சாப்பாட்டுக் கடையில இலையான் மொய்ச்சாலே பறந்தடிச்சு வந்து அந்தக் கடைக்கு 'சீல்' வைக்கிற எங்கட 'பி.எச்.ஐ' மாரும், அவையின்ர டிப்பார்ட்மெண்டும் பெரிய கொம்பனியளில என்ன நடந்தாலும் கண்ணைப் பொத்திக்கொண்டு போடுவினம்.**

**மானிப்பாயில உள்ள பேமஸான பேக்கரியொண்டு, யாழ்ப்பாணத்தில நாலைஞ்சு இடத்தில கிளை எல்லாம் திறந்து அமோகமா இயங்குது. தனிய பேக்கரி ஐட்டம் எண்டில்லாமல் எல்லாவகையான சாப்பாடும் ஓர்டருக்கும் அவை செய்து குடுக்கினம். அவையின்ர சில கிளையளிலயும் விக்கினம். இதெல்லாம் நல்ல விசயம் தான். சின்ன பேக்கரியாத் தொடங்கி இப்பிடி பெரிய கொம்பனியா மாறி நிக்கிறதைப் பாராட்டத்தான் வேணும். ஆனால் அதுக்காக அவை சட்டத்தை மதிக்காமல், வளைக்க நினைக்கிறதையும் சொல்லத்தானே வேணும்.**

**சுற்றாடல் அதிகாரசபையிட்ட முறையான அனுமதி இல்லாமல் இந்த பேக்கரியின்ர சாப்பாடுகள் செய்யிற 'கிச்சன்' தனியா ஒரு இடத்தில இயங்குது. அதுக்கு பிரதேசசபையில மக்கள் பிரதிநிதியள் இருக்கேக்க அனுமதி குடுபடேலை. அதுக்குப் பிறகு ஏதோ நடந்து இப்ப அந்த கிச்சன் இயங்கிக் கொண்டிருக்கு. பிஸ்னஸுக்கு சாப்பாடு செய்யிற கிச்சன்களில இருக்க வேண்டிய புகைக்கூண்டில இருந்து, காத்தோட்டமான சூழல், கழிவு போற ஏற்பாடு, விசாலமான இடம் எண்டு எதுவுமே இல்லாம அந்தக் கிச்சன் இயங்குதாம். அதோட 24 மணித்தியாலமும் தேங்காய் திருவுற மிசின், உருளைக்கிழங்கு உரிக்கிற மிசின், விழுந்தடிக்கிற பாத்திரங்கள் எண்டு ஒண்டு மாறி ஒண்டு பெருஞ் சத்தம் போடுறதால அக்கம் பக்கத்தில இருக்கிறவை நிம்மதியா இருக்கேலாம நித்திரை கொள்ளேலாமல் கஷ்டப்படுகினம். இதையெல்லாம் அயல்வீடுகளில இருக்கிறவை சுகாதாரத்துறை, சுற்றாடல் திணைக்களம், பிரதேசசபை எண்டு எல்லா இடமும் முறையிட்டாலும் கூட, எல்லாரும் அந்தக் கிச்சனுக்கு வந்து விசிட் அடிச்சுக்கொண்டு போகினமே தவிர, உருப்படியா ஒண்டும் நடக்கேலை. 'அந்தக் கிச்சனை அகற்றவேணும்' எண்டு சனம் சொல்லேலை. எல்லாம் முறைப்படி அனுமதி எடுத்து, சூழலுக்கு மாசில்லாமல், அயலட்டையளுக்கு கரைச்சல் இல்லாமல் நடத்தச் சொல்லித்தான் கேக்கினம். சனம் இவ்வளவு முறைப்பாடு செய்தும் ஏன் உரியவை உடனடியா நடவடிக்கை எடுக்கத் தயங்குகினம் எண்டதுதான் இன்னும் விளங்காமல் இருக்கு. எல்லாம் மருதடியானுக்குத் தான் வெளிச்சம்.**



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதியாட்டத்தில் இந்திய அணி!

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடுவது எனத் தீர்மானித்தது. அதிரடியைக் கையிலெடுத்து அமோக ஆரம்பத்தைக் கொடுத்தார் அணித்தலைவர் ரோகித். கில் நிதானமாக ஆடி ரோகித்தின் இன்னிங்ஸுக்குப் பலம் சேர்த்தார். அணி 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். எனினும், கோலி மற்றும் கில் இணைந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். அணி 164 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் உபாதை காரணமாக வெளியேறினார் கில். களமிறங்கினார் ஸ்ரேயஸ். கில்லின் வெளியேற்றம் உணரப்படாத அளவுக்கு அபாரமாகவும், நிதானமாகவும் அவரின் ஆட்டம் அமைந்தது. மறுமுனையில் அரைச்சதம் கடந்து கட்டுக்கோப்பான இன்னிங்ஸைக் கட்டமைத்தார் கோலி. ஒருநாள் ஆட்டங்களில் தனது 50ஆவது சதத்தைப் பதிவுசெய்தார் கோலி. 49 சதங்களைப் பெற்றிருந்த சச்சினின் சாதனை, அவருடைய சொந்த மைதானமான வான்கடேயில் பல்லாயிரம் ரசிகர்கள் திரண்டிருக்க - பிரபலங்கள் வீற்றிருக்க கோலியால் தகர்க்கப்பட்டது. ஸ்ரேயஸ் அதிரடியாக விளையாடி 67 பந்துகளில் சதம் கண்டார். 117 ஓட்டங்களுடன் கோலி ஆட்டமிழந்தார். ராகுல் கடைசிக்கட்ட அதிரடியைக் கையிலெடுத்து 20 பந்துகளில் 39 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் 4 விக்கெட்களை இழந்து 397 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.



பந்துவீச்சில் சவுத்தி 3 விக்கெட்களை வீழ்த்தினார். எனினும் அவர் 100 ஓட்டங்களை வாரி வழங்கியிருந்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான கொன்வே, ரச்சின் ரவீந்திரா இருவரும் தலா 13 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். எனினும், வில்லியம்சன் மற்றும் மிச்செல் இருவரும் இணைந்து ஆட்டத்தை மெல்லமெல்லமாக இந்தியாவிடம் இருந்து நகர்த்திச் சென்றனர். கண்முன்னால் இந்தியக் கொடிகள் அஸ்தமித்துக் கொண்டிருந்தன. ஓவருக்கு ஒரு பவுண்டரி, ஓரிரு ஓட்டங்கள் என்ற கொள்கையில் இருவரும் தீர்க்கமாக இருந்தனர். வெற்றியும் கண்டனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கண்டபின்னர் அதிரடியைக் கையிலெடுத்து சதத்தை மிக இலகுவாகப் பூர்த்தி செய்தார் மிச்செல். வில்லியம்சன் 69 ஓட்டங்களுடன் சமியிடம் வீழ்ந்தார். அதே ஓவரில் லாதத்தை ஓட்டமெதையும் பெறவிடாமல் வெளியேற்றினார் சமி. இந்த ஓவரே ஆட்டத்தின் திருப்புமுனை. பிலிப்ஸ் அடித்தாடி எத்தனித்தபோது இந்தியாவின் வெற்றி உறுதியாகியிருந்தது. 41 ஓட்டங்களுடன் பிலிப்ஸை வெளியேற்றினார் பும்ரா. 134 ஓட்டங்களுடன் சமியிடம் வீழ்ந்தார் மிச்செல். முடிவில் நியூஸிலாந்து அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 327 ஓட்டங்களைப் பெற்று 70 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சமி 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தே.அ.இல : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசு கூப்பன் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பமுடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

அவுஸ்திரேலியா — தென்னாபிரிக்கா

இடம் : கொல்கத்தா

நேரம்: பி.ப. 2.00

CRICKET AUSTRALIA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரசுகளை நம்புவதால் பயனில்லை

இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்களுக்கு 6 மாத ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, மீண்டும் தாயகம் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களோடு பிடிபட்ட இன்னொரு மீனவர் 24 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்த பின்னர்தான் இந்தியாவுக்குச் செல்லமுடியும். குறித்த 22 பேரும் ஒரே குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட நிலையில் இந்த ஒரு மீனவர் மட்டும் ஏன் சிறைவாசம் அனுபவித்த பின்னர் வீடு செல்லவேண்டும்? அங்கேதான் இருக்கிறது விடயம். குறித்த சிறைவாச மீனவர் இதற்கு முன்னரும் இதேபோன்று சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்தபோது கைது செய்யப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டு இந்தியா செல்ல அனுமதிக்கப்பட்டார். நல்லமாட்டுக்கு ஒரு சூடு. ஏற்கனவே தண்டனை பெற்ற அந்த மீனவர் இலங்கைக் கடலை எட்டியும் பார்த்திருக்கக்கூடாது. ஆனால் அவரோ சிறைத்தண்டனை ஒத்திவைக்கப்பட்ட காலப் பகுதிக்குள் மீண்டும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருக்கிறார். விளைவு? தன் சகாக்கள் நாடு சென்ற போதும், இவர் மட்டும் 24 மாதங்கள் இலங்கைச் சிறைக்கம்பிகளை எண்ண வேண்டியதுதான்.

இந்தச் சம்பவம் ஒரு விடயத்தை மிகத் துலாம்பரமாக்குகின்றது. இந்திய மீனவர்களுக்கு என்னதான் தண்டனை வழங்கினாலும் அவர்கள் மீண்டும் மீண்டும் அத்துமீறத்தான் போகிறார்கள் என்பதே அது. ஆனால் இங்கே பிடிபடுகின்ற மீனவர்கள் வெறும் கருவிகள் மாத்திரமே. அவர்களைப் பின்னின்று இயக்குவது பெரும் பணமுதலைகள். அவர்கள் தான் ஆழ்கடலில் இருக்கும் அத்தனை வளங்களையும் வாரியெடுக்கும் ட்றோலர்களை வாங்கிக் கொடுத்து, அதில் போய் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்குமாறு கூலிக்கு வேலை செய்யும் மீனவர்களைப் பணிக்கிறார்கள். அவர்களும் தங்கள் குடும்பத்தின் நிலை காரணமாக வேறுவழியின்றி நம் கடல் எல்லைக்குள் நுழைகிறார்கள். கடல்வளத்தை அள்ளுகிறார்கள். இலங்கை மீனவர்களின் வலைகளை அறுக்கிறார்கள். சிலவேளை கடற்படையிடம் பிடிபடுகின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் படகு நிறைய மீனோடு சென்றுவிடுகிறார்கள். ஒருவகையில் அவர்களின் குடும்பநிலை காரணமாகத்தான் இவ்வாறு செய்கிறார்கள் என்று பார்த்தாலும், மறுபுறத்தில் இந்த அத்துமீறிய மீன்பிடியால் வடக்கு மீனவர்கள் கடற்றொழிலையே கைவிட வேண்டிய நிலையை இந்திய மீனவர்கள் உண்டாக்கியுள்ளனர். இன்னொரு குடும்பத்தின் வாழ்வாதாரத்தை அழித்து தங்கள் குடும்பத்தை வளம்படுத்துவது மனச்சாட்சியே இல்லாத செயலென்று இந்தியமீனவர்களுக்கு ஏன் புரியவில்லை?

ஒருபக்கம் இந்திய மீனவர்களின் அத்துமீறல், இன்னொரு புறம் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளால் அழிவுறும் கரையோரக் கடல் வளம், மறுபுறம் எல்லையோரக் கடற்பகுதிகளில் உள்நுழைந்து அட்டூழியம் செய்யும் சிங்களமீனவர்கள் என்று மும்முனை 'மூதேவிகளால்' வடக்கு மாகாணத் தமிழ் மீனவர்கள் படும்பாடு சொல்லிமாளாது. இந்த மும்முனைப் பிரச்சினை குறித்து எத்தனையோ தடவை வடக்கு மீனவர்கள் போராடிப் போராடிக் களைத்துவிட்டார்கள். எவ்வளவுநாள் தான் அவர்களும் போராடிக் கொண்டிருக்க முடியும்? உண்மையில் இருநாட்டு அரசுகளும் மனம் வைத்தால் இந்தப் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்க முடியும் ஆனால் அவை அதை ஒருபோதும் விரும்பாது. மீனவர்களை மோதவிட்டு, அதைவைத்து அரசியல் ஆதாயம் தேடுவதையே இலங்கை – இந்திய அரசுகள் விரும்புகின்றன. எனவே இந்த அரசுகளிடம் வடக்குத் தமிழ் மீனவர்கள் தீர்வை எதிர்பார்த்தால் இலவு காத்த கிளிகளாக ஏமாறவேண்டியதுதான். ஒரு மீனவரின் பிரச்சினை இன்னொரு மீனவருக்குத்தான் நன்கு தெரியும். எனவே அரசுகளையோ, அமைச்சர்களையோ நம்புவதை விடுத்து, இந்திய – இலங்கை மீனவர் சங்கங்கள் தமக்கிடையே பேச்சை நடத்தி, ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதே இந்தப் பிரச்சினைக்கு சரியான தீர்வாக இருக்கும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."

- ஜோன் மூர்(அமெரிக்க இயற்கையியலாளர்)




# ஜனாதிபதி ரணிலின் இறுதிப் பாதீடு இது!

### ஐக்கிய மக்கள் சக்தி சவால்

**கொழும்பு, நவ. 16**

**நாட்டை வங்குரோத்து அடைய வைத்தவர்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்படவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இறுதிப் பாதீடு இதுவாகவே அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் சவால் விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

'ராஜபக்சக்களும், அவர்களின் சகாக்களுமே நாடு வங்குரோத்தடையக் காரணம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் இன்னமும் சிலர் ராஜபக்சக்களுக்கு சோரம் போகும் வகையில் சபையில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். ஆடை அணிந்து கொண்டா அவர்கள் உரையாற்றுகின்றனர் எனத் தெரியவில்லை.

வரி நிவாரணம் வழங்கியதால்தான் கோத்தாபய ராஜபக்ச இல்லாமல்போனார் எனக் கூறுகின்றனர். தனது சகாக்களுக்கே கோத்தாபய ராஜபக்ச வரி விலக்களித்தார். 30 வீதத்தால் வரி வருமானத்தைக் குறைத்து, அரசின் வருட வருமானத்தை 680 பில்லியன் ரூபாவால் குறைத்துத்தான் நாட்டை வங்குரோத்தடையச் செய்தனர். இவருக்குத் தண்டனை வழங்கக்கூடாதா?

சட்டம் என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் இவர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடுத்து, சிவில் உரிமைகளை இல்லாது செய்ய வேண்டும். 2 கோடியே 20 இலட்சம் மக்களை பள்ளத்தில் தள்ளியவர்கள் இவர்கள். ரணில் விக்கிரமசிங்கவின் இறுதி பாதீடாகவே இது அமையும் - என்றார். (ம-44)

# இரு அரச வங்கிகளின் 20% பங்கு தனியாருக்கு

### பட்ஜெட் உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய இரண்டு அரச வங்கிகளின் 20 வீத பங்குகளை முக்கியமான தனியார் நிறுவனங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி தனது வரவு - செலவுத்திட்ட உரையில் தெரிவித்துள்ளார்.

வங்கிகளின் நீண்ட நிலைத்த தன்மையைப் பேணுவதற்கு இது உதவுவதுடன் மக்களின் வரிச்சுமையைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும். அத்துடன் அரச வங்கிகளின் பிரதான அதிகாரிகள், பணிப்பாளர் சபை நியமனங்களிலும் கடன் பெற்றுக்கொள்பவர்கள் மீதும் இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. அதேவேளை வங்கிகளின் கடன் எல்லையை 3.9 ட்ரில்லியனிலிருந்து 7.35 ட்ரில்லியனாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-6)

**நாளை** 17.11.2023 வெள்ளிக்கிழமை கார்த்திகை 01

சுபநேரம் : 06.08 - 07.38
ராகுகாலம் : 10.38 - 12.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்), இலங்கை மின்சார சபை பயன்படுத்துவதற்கான வீட்டினை (Quarters) வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கோரல்**

**கூறுவிலை எண்:**
DGM/NP/CE(Com)/BD/T/2023/114

**கூறுவிலை விபரம்:**
பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்). இலங்கை மின்சார சபை மூன்று (3) வருட காலத்திற்கு வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பயன்படுத்துவதற்கான வீட்டினை (Quarters) பழைய பூங்கா வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்) அலுவலகத்தில் இருந்து 10km தொலைவிற்குள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**கூறுவிலையின் இறுதி திகதி:**
14.00 மணி. 23ம் திகதி நவம்பர் மாதம். 2023ம் ஆண்டு

**கூறுவிலை விண்ணப்பபடிவம்:**
சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற மாதாந்த வாடகை. வீட்டின் (Quarters) விபரங்களுடன் (வீட்டின் உறுதி நகல் பிரதி. வீட்டின் திட்ட வரைபட நகல் பிரதி அல்லது கட்டட வரைபடம்) இணைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்பம் வழங்கப்பட வேண்டிய முகவரி:**
விண்ணப்பத்தினை மூடிய கடித உறையினுள் வைத்து. கடித உறையின் மேல் பக்க இடது மூலையில் "பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்). இலங்கை மின்சார சபை பயன்படுத்துவதற்கான வீட்டினை (Quarters) வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கோரல். கூறுவிலை எண்: DGM/NP/CE(Com)/BD/T/2023/114" எனக் குறிப்பிட்டு தலைவர். ஏல வாரியம். பிரதிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்) அலுவலகத் தொகுதி. இலங்கை மின்சார சபை. பழைய பூங்கா வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். (021 222 0496)

**மற்றவை** (other):
ஒரு வருட வாடகையில் 50% னை ஒவ்வொரு வருடத்தின் தொடக்கத்திலும் முற்பணமாக பெறமுடியும்.

**மின் பொறியியலாளர்**
**பொருள் முகாமைத்துவம் (வட மாகாணம்)**
**இலங்கை மின்சார சபை.**

(cr.41018) (N.1)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 10.12.1942

**மறைவு** 03.11.2016

## அமரர் கந்தையா பரமநாதன்

**திதி: சதுர்த்தி**

அன்போடு அரவணைத்து ஆசையாய் அறிவுரைகள் கூறி
எமையெல்லாம் ஏற்றமுடன் வாழவைத்த ஐயாவே!
எந்நாளும் எம்மோடு இருந்த நீங்கள்
எம்மைவிட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம் இதயத்தில்
என்றும் வாழ்வீர்கள் ஐயா!

4 /3, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 05.11.1947

## தவமணி நடராசா

**மறைவு** 15.11.2023



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி நடராசா நேற்று (15.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நன்னித்தம்பி நடராசாவின் அன்பு மனைவியும். பரமேஸ்வரி. சோதிமலர். காலஞ்சென்ற மனோகரன் மற்றும் குமுதினி. குணாளன் (பிரான்ஸ்). பத்மினி (வவுனியா). குமரவேள் (நடன ஆசிரியர் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. நிர்வாகி - இணுவையூர் குமரநர்த்தனாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் கந்தசாமி. இராஜேஸ்வரி. காலஞ்சென்ற தங்கேஸ்வரன் மற்றும் சுகந்தி. சபாநாதன். டிலானி (நீதிவான் நீதிமன்றம் - சாவகச்சேரி) ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்ற இரத்தின பூபதி மற்றும் செல்வரத்தினம். இராஜலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான சுப்பையா. இராமநாதன். தங்கம்மா. சின்னத்தங்கச்சி ஆகியோரின் மைத்துனியும். தரணீதரன் - காயத்ரி. துஷ்யந்தினி - கிருபானந்தன் (கனடா).கருணாகரன். சிவகரன். ரஜீகரன். தர்சினி - குமாரராஜா. சதீஸ்கரன் - நிஷாந்தி. தினேஷ் - சரண்யா (ஜேர்மன்). கம்சலா - காந்தரூபன் (லண்டன்). மகீபன். ஜீவிதா -காண்டீபன் (லண்டன்). பகலவன் - துஷ்யந்தி (ஜேர்மன்). யுகன். கஜதீபன் - துசித்திரா. அதீசன் - துர்க்கா (நியூசிலாந்து). கவிந்தன். தட்சாயினி - பவன். ருஷானி ஆகியோரின் பேர்த்தியும். தர்வின். அஸ்வின். ஸ்ரீநிதன். ஸ்ரீநேகா. ரோகினி. திலக்ஷனா. சாருகன். தனீஷா. கபிஷன். அத்விகா. மதுமிதா. கரிஷ். துர்விஷ். சர்விகன். அஸ்ரிதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
[illegible] இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 824 0028

(cs.26958) (N.1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துபோகும். உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனசைவாட்டும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்திசெய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கடகம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவி யை நாடுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள்.

**துலாம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அமைவார்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்திவரும்.

**தனுசு:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரைச் சேர்ப்பீர்கள்.

**கும்பம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

**மீனம்:** கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். அழகும் இளமையும் கூடும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்

**பரமேஸ்வரன் கஜகரன்** அவர்கள்

**தரம் III அதிபர் சேவைக்கு** தெரிவுசெய்யப்பட்டமையை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி**

(cs.26964) (N.1)

## தேவை

2017 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட 3 இலக்க பதிவு கொண்ட, நல்ல நிலையிலுள்ள **Honda Dio Bike (Black Color Only)** அவசரமாக தேவைப்படுகிறது. விற்பனை செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
(உரிமையாளர்கள் மட்டும் நேரடியாக தொடர்புகொள்ளவும்)

சிறந்த விலை கொடுத்து பெற்றுக்கொள்ளப்படும்



தொடர்புக்கு
**077 22 00 148**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குநர்களை பதிவுசெய்தல்- 2024

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2024ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A – 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A – 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A – 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A – 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A – 05 | குளியலறை பொருத்திகள் மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A – 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A – 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A – 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A – 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A – 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A – 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A-17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |
| A - 18 | வாகனங்களுக்கான ரயர், ரியூப், மற்றும் மின்கலங்கள் |
| A - 19 | பாதணிகள், தோற்பொருட்கள், மழைஅங்கிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், |
| B- 13 | ஒட்டுவேலைகள், உலோகவேலைகள் |
| B-14 | கழிவகற்றல் சேவை (Gully Emptier service) |
| B-15 | திண்மக்கழிவு தரம் பிரித்தல் |
| B - 16 | வீதியோரம் வடிகால் பராமரிப்பு சேவை |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

- வழங்கல்கள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பதிற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2024"** எனக்குறிப்பிட்டு **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்"** எனும் முகவரிக்கு 20.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்**
**16.11.2023**

(cr.41008) (N.1)

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் உள்ள வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும்.

**0776110859**

## பணியாளர் தேவை

எமது கடைக்கு முகாமையாளர், விற்பனை பிரதிநிதிகள், உதவியாளர்கள் தேவை.

**076 315 6470**

(cs.26943) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பிய மூவரின் விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, நவ.16

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகளின் பின்னர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய வடமராட்சி கிழக்கு, குடத்தனையை சேர்ந்த மூவரின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

போர் காரணமாக குடத்தனை வடக்கைச் சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி (வயது-58), அவரது மகளான சின்னராஜா சுதர்சினி (வயது-42) மகனான சின்னராஜா சுதாகரன் (வயது-39) ஆகியோர் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

தற்போது படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கி இருந்தபோது பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அவர்களின் விளக்கமறியலை நீதிமன்றம் நீடித்தது.

(எ-100)

## 2024 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம் வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை வவுனியா மாவட்டம்

2024 ஆம் ஆண்டு வரைவு வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 169 இன் கீழ் பொதுமக்கள் பார்வைக்காக. 15.11.2023 ஆம் திகதி தொடக்கம் 28.11.2023 ஆம் திகதி வரையிலான அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணிவரை எமது அலுவலகம் மற்றும் பொது நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

2024ம் ஆண்டு வரைவு வரவுசெலவுத்திட்ட அறிக்கை

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 33,737,650.00 | |
| வருமான நன்கொடைகள் மற்றும் மீள்நிரம்பல்கள் | 48,598,480.00 | |
| மூலதனப் பெறுகைகள் | 50,015,200.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | 132,351,330.00 |
| **செலவினம்** | | |
| மீண்டெழும் செலவுகள் | 77,555,380.00 | |
| மூலதன செலவுகள் | 54,795,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | 132,350,380.00 |

சு.தெர்ஜனா
செயலாளர்
வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபை.
16.11.2023

(cr. 41016) (N.1)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 19 . 07 . 1970



இறைவன் அடியில் 15 . 11 . 2023

### மகேஸ்வரன் பாலரமணா (கண்ணா)

நெல்லியடியைச் சேர்ந்தவரும், ரோயல் பேர்ல் கார்டன் வத்தளையில் வசித்தவருமான மகேஸ்வரன் பாலரமணா நேற்று (15.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.மகேஸ்வரன் திரிசதி தேவி தம்பதிகளின் அன்பு மகனும், கோகிலாதேவியின் (கங்கா) அன்புக்கணவரும், பூங்குழலி, முகிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலாரமணி, சாந்தாரமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும், மணிசேகரன், பிரபாகர், சந்திரன், நாதன், லலிதா ஆகியோரின் மைத்துனரும், சரண்யா, கௌசல்யா, சஞ்சீவன், அபிநயா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மகாத்மா வீதி நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆலங் கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொடர்பு:
கோகிலாதேவி(கங்கா-மனைவி)
+94 764437519

(CR 41019)A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1953



மறைவு 13 . 11 . 2023

### சிவசுப்பிரமணியம் கமலாம்பிகை

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto, யாழ். சாவகச்சேரி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் கமலாம்பிகை அவர்கள் கடந்த (13.11.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மதியாபரணம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், கேதீஸ்வரன் (கேதீஸ்), வரதராஜன்(ஜெகன், வரதன்), யேசுதாசன்(அருள்), அஜந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாமதி, பத்மலோசினி, காலஞ்சென்ற கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், புவனேஸ்வரி, மகேஸ்வரி, விக்னேஸ்வரி, ஜயாத்துரை, பூரணம், பிரபா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Ansmen, Mathusen, Rakshan, Kailashini, Shiwin ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திருச்செல்வம் (செல்வம்) அவர்களின் அன்பு மைத்துனியும், நகுலேஸ்வரன்(ஈசன்) அவர்களின் பாசமிகு சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.11.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு: கேதீஸ் - மகன்
Mobile: +14168735780
ஜெகன்(வரதன்) - மகன்
Mobile: +447827318292
அருள் - மகன்
Mobile: +14379907912
ஈசன் - பெறாமகன்
Mobile: +94776447381
செல்வம்-மைத்துனர்
Mobile: +94771563002

தகவல்:
குடும்பத்தினர்.
பசுபதியார் வீதி,
சாங்கத்தானை,
சாவகச்சேரி.

(CR 41020) A-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 31 . 08 . 1922



ஆண்டவன் அடியில் 15 . 11 . 2023

### மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் இயந்திர இயக்குநர், ஒப்புநோக்குனர் - ஆனந்தா அச்சகம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும், இல 270/1, அடப்பன் வீதி யாழ்ப்பாணத்தைத் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (15.11.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை மேரி மார்கிறற் தம்பதிகளின் அன்பு மகனும், கபிரியேற்பிள்ளை மரியமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசம்மாவின் (ஒட்டகப்புலம்) அன்புக்கணவரும், காலஞ்சென்ற இலாசரஸ் அழகரட்ணம் (பொலிஸ் அதிகாரி) அவர்களின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அல்பிரட் அம்மா (ஆசிரியை), மரியம்மா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், அலெக்ஸ் நிசாபதி, றெமிஷியன் ஜெயபதி, கமில்ரன் விஜயபதி (குருமுதல்வர் பணியக அலுவலர்), யூட் தயாபதி, றெக்ஸ் றூபபதி (முன்னாள் ICRC ஊழியர், The Thinnai foods), ஆகியோரின் பாசமிகு தந்தையும், இமல்டா (ஆசிரியை, பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை), நிலாந்தி (ஆசிரியை யா/கொட்டடி நமச்சிவாய வித்தியாலயம்), ஸ்ரீரஞ்சினி (முகாமைத்துவ உதவியாளர், சென்ஜோன்ஸ் கல்லூரி), றொஷானி (ஆசிரியை, யா/கொழும்புத்தறை சென்.ஜோசப் வித்தியாலயம்), டிலாணி (ஆசிரியை, யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்வியோ, சைனுகா, பிரியதர்சினி, பிரசாத், நிறோஜன், ஷஹானன், ஆராதனா, றக்ஷனா, நிதுர்சிகா மற்றும் காலஞ்சென்ற ஹர்ஷனா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், தவமணி (கனடா), ராஜக்கோன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், Dr.ஊதிகா (அமெரிக்கா), சந்திரிக்கா (லண்டன்), தேவிகா (கனடா) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது பி.ப 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யா/ புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் பி.ப 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 959 7158
(றூபன் - மகன்)

இல.270/1, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 52734) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக தின விழாவும் 'இராம ஒளி' சஞ்சிகை வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.16

இராமநாதன் கல்லூரியின் நூலகதின விழாவும் 'இராம ஒளி' சஞ்சிகை வெளியீடும் இன்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ உதவியாளர் திருமதி ஸ்ரீரங்கநாயகி இராகுலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-66)

---

*மறியல்...*

29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை. கடந்த மாதம் 5ஆம் திகதி அல்வாய் கிழக்கில் உள்ள வீடொன்றில் இருந்து ப.தில்லைராணி (வயது-89) என்ற மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். சடலத்தில் காயங்கள் காணப்பட்டதை அடுத்து, மரணத்தில் சந்தேகம் உள்ளது என்று அறிக்கையிட்ட பருத்தித்துறை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி பி.வாசுதேவா, உடற்பாகங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பியிருந்தார். பகுப்பாய்வு அறிக்கையின்படி மூதாட்டி கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அந்த வீட்டில் வசித்த தம்பதி மற்றும் பணிப்பெண் ஆகியோர் கடந்த 9ஆம் திகதி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்தது நீதிமன்றம்.

(அ-எ-100)

---

## யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்
## விசேட பொதுக்கூட்டம்

இடம் : பாடசாலை பிரதான மண்டபம்
காலம் : 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 9.30 மணி.
விடயம் : புதிய கட்டடம் அமைப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளல்.

அனைத்து பழைய மாணவர்களையும், பெற்றோர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர்,**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/கைதடி விக்கினேஸ்வர வித்.**

CS 26972)A-1

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம்
02 . 10 . 1948

அஸ்தமனம்
27 . 11 . 2022

பாலாவி தெற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் அருணாசலம் கந்தசாமி

**(கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்)**

**திதி: வளர்பிறை சதுர்த்தி**

கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில்
எம்மைவிட்டுப் பிரிந்த அப்பாவே!
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த
வாழ்வு ஏனோ முடிந்து போனது
எப்படியும் வாழலாம் என்று இல்லாது
இப்படித்தான் வாழவேண்டும் என்று
வாழ்ந்துகாட்டிய அன்புத் தந்தையே!
ஓர் ஆண்டு பிரிந்து உங்கள் நினைவில்
வாழும் எங்களுக்கு ஆறுதல் எங்கே அப்பா?
ஆண்டவன் பொன்னடியில் ஆராத இன்பத்துடன் நீங்கள்
இருக்க, என்றும் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் இன்று (16.11.2023) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழவுள்ளது. உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CR 41021) A-1

---

# மரண அறிவித்தல்

## இராசையா ஜெயசுந்தரசேகர் (பஞ்சலிங்கம், பஞ்சு)



**தோற்றம்** **17.12.1956**

**மறைவு** **13.11.2023**

நல்லூர் சிவன் புது வீதியை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, விவசாய கந்தோர் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம், பஞ்சு என்று அன்பாக அழைக்கப்பட்ட இராசையா ஜெயசுந்தரசேகர் கடந்த (13.11.2023) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா பவளம் தம்பதியரின் அன்பு மகனும், சிமியோன் றோஸ்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், மரியராணி மார்கிறேட்டின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லலிதாதேவி, சுசிலாதேவி, ஜெயஉதயகுமார், ஜெயசிறிவரதராஜா, ஜெயசிவகுமார் மற்றும் ஜெயபாலசிங்கம், நிர்மலாதேவி (கனடா), சீத்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரிசிக்கான், ரினேஷ் (மலேசியா), ரிசாந்தன், ரிசிக்கா (பிரான்ஸ்), ரிசாத், ரிசிராஜ், ரிசீலன் (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற ரிசிவரன் ஆகியோரின் அன்புத் தகப்பானரும், விஜயா, எமிலி (மலேசியா), சுஜித்தா, திலீபன் (பிரான்ஸ்), யாழினி, திவ்யா, கௌதமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஞானம் மற்றும் கிளியன், றீற்றா, ராஜம், றெஜினா, குணசேகரம், மேரியம்மா, பவுலின், சீலன், றொபேட், றஸ்கின் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிலோலா, அவ்லியா, திக்ஷன், விகிர்தன், ஜொறிபன், ஆதீஷ், ஆரோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (16.11.2023) முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 26974) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய விமானநிலையத்துக்கு பட்ஜெட்டில் நிதியொதுக்கீடு




**கொழும்பு, நவ. 16**

**சுற்றுலாப் பயணிகளுக்கான பயணத்தை இலகுபடுத்தும் நோக்கில் இலங்கையில் மேலுமொரு சர்வதேச விமான நிலையத்தை அமைப்பதற்கு வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வரவு- செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அதற்கமைய புதிய சர்வதேச விமானநிலையம் ஹிங்குராகொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் யாவும் 2024 இல் ஆரம்பிக்கப்படும். இந்த விமானநிலையம் அமைப்பதற்குரிய முதல் கட்ட நகர்வுகளுக்காக இந்த வரவு - செலவுத் திட்டத்தில் 2 பில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். (ச-213)




## மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ள வீதி!

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் - பொன்னாலை, பருத்தித்துறை பிரதான வீதியின் கீரிமலைக்கு அண்மையில் அமைக்கப்பட்ட பாலம் மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தவேலைகள் காரணமாக, பாலத்துக்கு அருகாமையால் சுற்றுப்பாதை அமைக்கப்பட்டு அதனூடாக மக்கள் போக்குவரத்தை மேற்கொண்ட நிலையில், தற்போது பாலம் மக்கள் பாவனைக்காக விடப்பட்டது.

இதே வீதியில் வலித்தூண்டல் அன்னம்மாள் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீதிப்பகுதி அண்மையில் காப்பெற் இடப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டபோதிலும், இடைப்பட்ட 100 மீற்றர் பகுதி எந்தவிதச் சீரமைப்பும் இல்லாமல் நீண்டகாலமாகக் கைவிடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியையும் சீரமைத்துத் தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரியுள்ளனர். (ம-125)



## சீரற்ற காலநிலையால் முறிந்து வீழ்ந்த மரம்!

*போக்குவரத்து ஸ்தம்பிதம்*

வவுனியா, நவ. 16

வவுனியா - மன்னார் பிரதான மார்க்கத்தில் சீரற்ற காலநிலை காரணமாக மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து பலமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது.

நாடு முழுவதும் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்துவரும் நிலையில் வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை பெரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் அந்தப்பகுதியூடான போக்குவரத்து பகுதியளவில் தடைப்பட்டதையடுத்து பொதுமக்களின் உதவியுடன் மரம் அகற்றப்பட்டு போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது. (ச-18)

## யாழ்ப்பாணம் பல்கலையில் கணக்கியல் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 16

சர்வதேச கணக்கியல் நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் நடைபெற்றன.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கணக்கியல் துறையால் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், முன்னாள் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பிரதிநிதிகள் பணியாளர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-20)





## மரண அறிவித்தல்

மண்ணில் 18 . 12 . 1990



விண்ணில் 15 . 11 . 2023

### மரியதாசன் கிறிசாந் மோசஸ்

**B-Tech Agri.Eng,**

**(பழைய மாணவர், இந்துக்கல்லூரி-புத்தளம், புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை)**

புத்தளத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ம.கிறிசாந் மோசஸ் அவர்கள் நேற்று (15.11.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் மோசஸ் மரியதாசன் (ஓய்வுபெற்ற பொறியியல் பணிப்பாளர்- வீதி அபிவிருத்தி அதிகாரசபை), சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு புதல்வரும், Dr. பிரியங்கா கிறிசாந்தி (வைத்தியர், போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு), மிலனி கிறிசாந்தி (மாணவர்- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மனுவல்பிள்ளை மோசஸ் (ஓய்வு பெற்ற அதிபர் புனித சாந்த மரியாள் தமிழ் மகாவித்தியாலயம்), சறோஜினி, காலஞ்சென்ற வேலாயுதம், சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜேசுதாசன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் - இலங்கை வங்கி, புத்தளம்), சூசைதாசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), அருள்தாசன் (பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசாபை, புத்தளம்), மேர்சி சுசிகலா, மேனகா, ஆன் சிசிலியா, காலஞ்சென்ற சிவகுமாரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், 20A, இரண்டாம் ஒழுங்கை, கொச்சிமடுத்தரவை, அநுராதபுர வீதி, புத்தளத்திலுள்ள வீட்டிலிருந்து நல்லடக்க ஆராதனைக்காக அநுராதபுர வீதியிலுள்ள புனித மரியாள் தேவாலயத்திற்கு பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு இறுதி ஆராதனைகளின் பின்னர் சேனைக்குடியிருப்பு பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.இல:071 841 4646

தகவல்: குடும்பத்தினர்.

(CR 41023) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொட்டும்...

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகக் கடந்த சில நாள்களாக வடக்கு மாகாணத்தில் பரவலாக மழை பெய்துவருகின்றது. நேற்று மழை தீவிரம் பெற்றிருந்த நிலையில், மாகாணத்தின் தாழ் நிலப்பகுதிகள் பல வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

**850 குடும்பங்கள் பாதிப்பு**

கனமழை காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 850 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 910 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 234 குடும்பங்களைச் சேர்ந்த 766 பேரும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 279 குடும்பங்களைச் சேர்ந்த 950 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 191 பேரும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 630 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

**விவசாயம் பாதிப்பு**

தற்போது பெய்துவரும் மழை நேற்றுத் தீவிரமடைந்த நிலையில், விவசாய நிலங்கள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெங்காயம், கரட், கோவா போன்ற பயிர்களை அண்மையில் நடுகை செய்த விவசாயிகள் வெள்ளத்தால் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமத்தில் அதிகளவான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் மழையால் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, முரசுமோட்டை, பண்ணங்கண்டி, பரந்தன், உமையாள்புரம் ஆகிய இடங்களில் விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மழை தொடரும் பட்சத்தில் பயிரழிவுகள் ஏற்படலாம் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

**போக்குவரத்து பாதிப்பு**

தற்போதைய மழையால் பல இடங்களில் போக்குவரத்து நெருக்கடிகள் தோன்றியுள்ளன. வீதிகளில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக வலிகாமம் மேற்குப் பகுதிகளான தொல்புரம், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் வீதியை மேவி வெள்ளம் பாய்ந்தோடுவதால் மக்கள் பயணிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கு முறையான வடிகால் அமைப்பு இல்லாமையே காரணம் என்று பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"ஒவ்வொரு ஆண்டும் மழை காலத்தில் வீதியில் வெள்ளம் தேங்கிப் பயணிக்க முடியாத நிலைமை தோன்றுகின்றது. இது தொடர்பாக பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதும் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையினர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. மாணவர்களின் புத்தகப் பைகள் நனையுமளவுக்கு வீதியில் வெள்ளம் நிற்கின்றது" என்று தெரிவித்தனர் சுழிபுரம், பெரியதம்பிரான் வீதியைப் பயன்படுத்தும் மக்கள்.

**அச்சுவேலியில் அதிக மழை**

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுப் புதன்கிழமை காலை 8.30 மணிவரையான 24 மணி நேரத்தில் இலங்கையிலேயே அச்சுவேலியில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

அச்சுவேலியில் 175.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இந்தக் காலப் பகுதிக்குள் பருத்தித்துறையில் 170.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மீசாலையில் 133.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 128.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், தொல்புரத்தில் 118 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், திருநெல்வேலியில் 85.6 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், யாழ். மத்திய பகுதியில் 68.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் 58.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 34.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 6.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், நெடுந்தீவில் 2.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

(அ-எ-17-66-27-113-125)

## அடுத்த...

ராஜபக்ச தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலை முறையாகவும், சரியாகவும் நடத்துவதற்கு 21ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. தேர்தல் மோசடிகளைத் தடுப்பதற்கான சட்டமும் கொண்டுவரப்பட்டுள்ளது. நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊழல் எதிர்ப்புச் சட்ட வரைவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகத் தற்போது பேசப்படுவதால், இது ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்த பாதீடு எனச் சிலர் விமர்சிக்கின்றனர். இது தேர்தலை இலக்கு வைத்த பாதீடு அல்ல. ஏனெனில் பாதீடு தொடர்பில் அரசு மீது மக்கள் அதிருப்தி அடையலாம். பாதீட்டை மக்கள் ஏற்காமல் இருக்கலாம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டே பாதீடு முன்வைக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடம் தேர்தல் நடத்தப்படும். மக்கள் தமக்குத் தேவையானவர்களைத் தெரிவுசெய்யலாம் - என்றார்.

(அ-எ-44)

## பாதீட்டுக்கு...

கலந்துகொண்டு நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட பாதீட்டில் இருந்த விடயங்கள் இந்த பாதீட்டிலும் உள்ளன என்று நாமல் ராஜபக்ச கூறுவதுடன், பாதீட்டை தோற்கடிக்க எதிரணி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பாதீடு தொடர்பாகச் சீறிவிட்டு, கடந்த முறை பாதீட்டை ஆதரித்தவர்கள் இந்த முறை எதிர்க்க முடியாது என சமாளிப்பு வார்த்தையையும் பயன்படுத்தியுள்ளனர். இதன்மூலம் அவரின் இரட்டை அரசியல் நாடகம் அம்பலமாகின்றது. பெரமுனவின் தலைமையகத்தில் அவர்களின் சகாக்கள் முன்னிலையில் இந்தக் கருத்தைக் கூறட்டும். மக்கள் மத்தியில் இந்த நாடகம் எடுபடாது, அவர்கள் தந்த வலிகளை மக்கள் மறக்கவில்லை - என்றார்.

(அ-ம-44)

## அரசியல்தீர்வு...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை கிடைத்ததன் பின்னர், தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்கமுடியும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்றுச் சிறப்புமிக்க, புரட்சியான ஒரு வரவு - செலவுத் திட்டத்தையே சமர்ப்பித்துள்ளார். இது வங்குரோத்து அடைந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவித்த ஒரு நாட்டின் வரவு - செலவுத்திட்டமாகும். வேறு எந்த நிதி அமைச்சரும் வரவு-செலவுத்திட்டத்தை முன்வைக்கும்போது இவ்வாறானதொரு நிலைமை நாட்டில் இருக்கவில்லை.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு தர்க்க ரீதியிலான பிரதான இரண்டு காரணங்களே உள்ளன. முதலாவது, அரச வரவு - செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை. இரண்டாவது சர்வதேச கொடுப்பனவுக் கையிருப்பின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை.

நாட்டின் அன்றாட செயற்பாடுகளுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நிர்வாக செலவுகளுக்குப் போதுமான அளவு நிதி இல்லாமை மற்றும் இறக்குமதிகளுக்கு ஏற்ப ஏற்றுமதி வருமானம் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்தப் பற்றாக்குறைகள் ஏற்படுகின்றன.

கடந்த காலங்களில் அனைத்து அரசாங்கங்களும் பின்வரும் மூன்று பிரதான வழிமுறைகளின் ஊடாக இந்தப் பற்றாக்குறைகளை ஈடுசெய்துள்ளன. முதலாவது, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன்களைப் பெற்றுக்கொள்ளல். இரண்டாவது, அரச சொத்துகளை விற்பனை செய்தல். மூன்றாவது, இவை இரண்டும் போதுமானதாக இல்லாதவிடத்து பணத்தை அச்சிடுதல் என்பனவாகும்.

அரச நிதி தொடர்பான அனைத்து முகாமைத்துவ அதிகாரமும் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. இவ்வாறு பற்றாக்குறை தொடர்ந்தும் ஏற்பட்டு, நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் இருப்பதற்காக கடந்த காலங்களில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக அண்மைய வருடங்களில் இந்தச் சட்டங்களுக்கேற்ப செயற்படாமை போன்ற பல்வேறு காரணங்களால் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. நிதி முகாமைத்துவம் தொடர்பில், அன்று ஆட்சியில் இருந்த அரசாங்கம் தோல்வி கண்டதையடுத்தே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று, இந்த நெருக்கடியைத் தீர்க்க முன்வந்தார். இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இதற்குப் பொருத்தமான தீர்மானமாக கடன் மறுசீரமைப்பு மூலம் தீர்வைப் பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டார்.

2024 வரவு - செலவுத்திட்டம் மூலம் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பளம், அரசாங்கத்தின் பிரதான வருமான மூலமான அரச வரிவருமானத்தில் இருந்துதான் வழங்க வேண்டும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்துக்குப் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடன் கிடைக்கவுள்ளது. கடன் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் செயற்படுத்த போதுமான நிதி எமக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம். அதன் பிறகு, முடங்கிய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்க முடியும் - என்றார்.

(அ-எ-44)

## வீட்டில்...

வீட்டில் இருந்த 8 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் அதே இடத்தைச் சேர்ந்த 30 வயதான ஒருவரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து தாலிக்கொடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-125)

## அத்துமீறிய...

தமிழக மீனவர்களில் நால்வர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தனர். ஏனைய 22 பேர் தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்களில் ஒருவர் ஏற்கனவே எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டவராவார்.

வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிவான் ஜே. கஜநிதிபாலன், தமிழக மீனவர் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தில் மீண்டும் எல்லை தாண்டி மீன்பிடித்ததை அடுத்து அவரைச் சிறையிலடைக்க உத்தரவிட்டார். ஏற்கனவே அவருக்கு 18 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 18 மாதச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

தமிழக மீனவர் இப்போது விதிக்கப்பட்ட 18 மாதச் சிறைத் தண்டனையை 6 மாத ஏக காலத்தில் நிறைவேற்றவேண்டும் என்றும் முன்னதாக விதிக்கப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் சேர்த்து 24 மாத சாதாரணச் சிறைத் தண்டனை விதித்தார் நீதிவான்.

ஏனைய 21 மீனவர்களுக்கும் 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சாதாரண சிறைத் தண்டனை விதித்து அவர்களை விடுதலை செய்தது நீதிமன்றம். மீனவர்கள் பயணித்த 4 படகுகளின் உரிமையாளர்கள் தொடர்பான சான்றாதாரங்களை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் மன்றில் சமர்ப்பிக்காத காரணத்தால் வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

(அ-எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்...
வும், அவரைக் கொலை செய்யவும் முயன்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் நடந்துள்ளது.
மழை பெய்து கொண்டிருந்த நேரத்தில் முகமூடி அணிந்து, கைகளுக்கு கையுறை அணிந்து கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். மறைந்திருந்த கொள்ளையர்கள் இயற்கை உபாதைக்குச் சென்ற பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிக் கொள்ளையிட முயன்றுள்ளனர்.
பெண்ணை வீட்டுக்குள் கொண்டு செல்ல முயன்றபோது, பெண் கொள்ளையர்களுடன் முரண்பட்டுத்தன்னைக் காப்பாற்ற முயன்றுள்ளார். அப்போது கொள்ளையிட வந்தவர்களில் ஒருவரின் முகமூடியை அகற்றி பெண் அவர்களை இனங்கண்டுள்ளார். அதையடுத்து பெண்ணை அவர்கள் கொல்ல முயன்றுள்ளனர். ஆயினும் பெண் அவர்களிடம் இருந்து ஒருவாறு தப்பித்து வீட்டுக்குள் ஓடியுள்ளார். முகமூடி கழன்றதை அடுத்து கொள்ளையர்களும் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.
கழுத்தில் காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் தெல்லிப்பழை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
அதேவேளை, ஒரு வாரத்துக்கு முன்னர் அந்த வீட்டில் இருந்த எரிவாயு சிலிண்டர் திருடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-23)

சுகாதாரச்...
ஆடியபாதம் வீதியில் உள்ள பிரபல அசைவ உணவகத்துக்கு எதிராக 2018 ஆம் ஆண்டு அப்போது திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய தி.கிருபனால் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
சுகாதாரச் சீர்கேட்டுடன் தொடர்புடைய பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, உணவகத்தின் உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுத்திருந்தார்.
அதையடுத்து வழக்கு நீதிமன்றில் தொடர் விசாரணைக்கு நியமிக்கப்பட்டு, கடந்த 5 ஆண்டுகளாக வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.
வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், வழக்கு தீர்ப்புக்காக நேற்றுத் தவணையிடப்பட்டிருந்தது. நேற்று இந்த வழக்குத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டபோது, விசாரணைகளின் அடிப்படையில் உணவகத்தின் உரிமையாளர் குற்றவாளி என்று நீதிமன்று தீர்ப்பளித்தது. உணவக உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தது.
உணவக உரிமையாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா மன்றில் முன்னிலையாகியிருந்தார். வழக்குத் தொடுநர் சார்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ம.இராஜமேனன் மற்றும் சூ.குணசாந்தன் ஆகியோர் வழக்கை நெறிப்படுத்தினர். (அ-எ-26)


## காணி கட்டடம் விற்பனைக்கு

* பலாலி வீதி திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள 5 1/4 பரப்புக் காணியும் கட்டடமும் விற்பனைக்கு உள்ளது.
* A-9 வீதி திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் கட்டடமும் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 38 66 250

## வாடகைக்கு

யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள 62/17 (பழைய தபாற்கந்தோர் வீதி) மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு.

076 315 6470

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி



- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

## ROMANIA VACANCIES



# ரொமேனியா

நாட்டில் கட்டுமானத்துறையில் வேலை வாய்ப்பு

**Mason (கொத்தனார்)**

USD 650ல் இருந்து


**Welder (வெல்டர்)**

USD 700ல் இருந்து

தேர்வு நேர்காணல் எமது நிறுவனத்தில் பின்வரும் திகதியில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இடம்பெறும்.

தற்பொழுது பதிவுகள் இடம்பெறுகின்றது.
இன்றே உங்களது பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

**18.11.2023**
**சனிக்கிழமை**



* OT மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்
* 08 மணிநேர வேலை நேரம்
* உணவு, தங்குமிடம், போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதி இலவசம்!

USD = 324 LKR
02 வருட ஒப்பந்தம்

GOVAPCH 685905 732631

உங்களது CV மற்றும் Passport இனை 077 821 5566 என்ற இலக்கத்திற்கு WhatsApp அல்லது info@base1.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

உடன் அழையுங்கள்:
011 236 1227
076 823 5566
076 821 5566

BASE1 CONSULTANCY SLBFE LL NO. 3178
BASE 1 CONSULTANCY (PVT) LTD
No. 142-2/4, Galle Road, Wellawatte, Colombo 06.
Web : www.b1consultancy.com

Job Order App. No AL/3178/0001/23 3178/ADVT/04/23


## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 08 . 1937



மறைவு 15 . 11 . 2023

### ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணபதிப்பிள்ளை நேற்று (15.11.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் விசாலாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு மனோன்மணி தம்பதியரின் மருமகனும், ஜெயமணியின் (கனடா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, பொன்னுத்துரை, பாலசிங்கம், தளையசிங்கம், செல்வமணி, மகேஸ்வரி மற்றும் இரத்தினம், நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும், சாந்தினி (கனடா), குமுதினி, றோகினி (லோஜி), பிறேம்குமார், பிறேமினி ஆகியோரின் தந்தையும், கிருபாகரன் (கனடா), கேசவன், இந்திரகுமார், யோகேஸ்வரி, சிவேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், கிருஷாந், கிஷோர், ரிஷி, சாய்கிருஷ்ணா, கோபி கிருஷ்ணா, ஹரிக்கிருஷ்ணா, ஜானுதி, சரத்குமார், மதுரா, சஜீவன், பிரியதர்ஷன், அனந்தராம், அபிஷ்ராம், நவின்சிகா ஆகியோரின் பேரனும், அனந்திகா வின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2023) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P: 077 947 6502, 076 5460 806

தகவல்: குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.